# JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU

## CC No.52/2023

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : LW - 4/PW- 4 |
| Name | : திரு. சி.பாரதி |
| Father/Husband's Name | : சின்னசாமி |
| Village | : முத்துகாபட்டி |
| Taluk | : நாமக்கல் மாவட்டம் |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 64 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.03.2026.

Accused present.

**முதல் விசாரணை–**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம் முத்துகாபட்டியில் வசித்து வருகிறேன். கடந்த 29.09.2006 அன்று நான் சென்தாமஸ் மவுண்ட் திருட்டு வீடியோ தடுப்பு பிரிவில் ஆய்வாளராக பணிபுரிந்த போது மதுராந்தகம் அருகேயுள்ள பவுஞ்சூர் கிராமத்தில் முகாந்திரமிட்டிருந்தோம். அப்போது மதியம் 12.30 மணியளவில் இந்தியன் மியூசிக் இண்டரியஸ் சார்ந்த துப்பறிவாளர் திரு.ராமானுஜம் என்பவர் முகாமில் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று சென்ட்தாமஸ் மவுண்ட் திருட்டு வீடியோ தடுப்பு பிரிவு குற்ற எண்.82/2006 பிரிவு 51 r/w 63 Copy Right Act 1957 கீழ் வழக்கு பதிவு செய்து விசாரணைக்கு எடுத்து கொண்டேன். பின்பு பார்ட்டி சகிதம் பவுஞ்சூர், திருவாதூர் அரசினர் உயர்நிலை பள்ளி ரோடில் உள்ள ராஜா எலக்ட்ரானிக்ஸ் என்ற கடைக்கு சென்று அதன் உரிமையாளர் ராஜாவிடம் சோதனை நமுனா அளித்து 14.15 முதல் 14.45 வரை சோதனையிட்டதில் அரசு உரிமம் அல்லாத சிடிக்கள் 310 னை வேறு தனி நபர் சாட்சிகள் இல்லாததால் காவலர்கள் த.கா.839 மகேந்திரன், த.கா.741 அபிமன்யூ

ஆகியோர்கள் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றினோம்.

பின்பு எதிரியை கைது செய்து அதே சாட்சிகள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலமும் பெற்றேன். பின்பு 16.00 மணிக்கு முகாம் அலுவலகம் கொண்டு வந்து திரேக பரிசோதனை செய்து பாரா வசம் ஒப்படைக்கப்பட்டது. அதன் பிறகு சம்மந்தப்பட்ட மதுராந்தகம் நீதிமன்றத்திற்கு நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. வழக்கில் கைப்பற்றப்பட்ட உரிமம் இல்லாத சிடிக்களை படிவம் 95 மூலம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டது. பின்பு விசாரணை முடித்து 13.02.2007 அன்று வழக்கின் குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்தேன்.

**முதல் தகவல் அறிக்கை அதசாஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி அதசாஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. Search Slip அதசாஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. படிவம் 95 அதசாஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் சோதனை ஜபிதாவில் உள்ள முதலாவது கையொப்பம் மகேந்திரன் உடையது. **அந்த கையொப்பம் அதசாஆ 9 மற்றும் 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –**

என்னிடம் எந்த தேதியில், எந்த இடத்தில் யார் புகார் கொடுத்தார்கள் என்று கேட்டால் 29.09.2006 அன்று 12.30 மணிக்கு பவுஞ்சூர் முகாமில் ராமானுஜம் என்பவர் கொடுத்தார். எத்தனை மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்று கேட்டால் புகார் கொடுத்தவுடன். அன்றைய தேதியில் எத்தனை புகார் வந்தது என்று கேட்டால் ஞாபகமில்லை. குற்ற எண்.81/2006 என்ற வழக்கிலும் அதே நாள், நேரத்தில் புகார் பெறப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். எதன் அடிப்படையில் புகார்தாரர் புகார் அளித்தாரென்று கேட்டால் இந்தியன் மியூசிகல்ஸ் இன்டஸ்டிரீஸ் நிறுவனத்தின் துப்பறிவாளர் என்ற முறையில் புகார் கொடுத்தார். அவர் துப்பறிவாளர் என்பதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அவரை நியமனம் செய்ததற்கான ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

நான் எத்தனை மணிக்கு சம்பவயிடத்திற்கு சென்றேன் என்று கேட்டால் பகல் 14.00 மணிக்கு. அந்த பகுதி மக்கள் நடமாட்டம் உள்ள பகுதியென்று சொன்னால் சரிதான். சோதனை நமுனாவை எத்தனை மணிக்கு கொடுத்தேன் என்று கேட்டால்

14.00 மணிக்கு இடத்திற்கு சென்று எதிரியிடம் சோதனை நமுனா கொடுத்தேன். சம்பவயிடம் எங்குள்ளது என்று கேட்டால் ராஜா எலக்ட்ரானிக்ஸ், அரசினர் உயர்நிலை பள்ளி ரோடு, திருவாதூர். பார்வை மகசர், வரைபடம் இவ்வழக்கில் தயார் செய்தேனா என்றால் இல்லை. கைப்பற்றுதல் மகசர் தயார் செய்துள்ளேனா என்றால் இல்லை. தனி நபர்கள் யாராவது சாட்சியாக போட்டுள்ளேனா என்றால் யாரும் முன்வராததால் போலிசாரை சாடசியாக சேர்த்துள்ளேன். எந்தெந்த நபர்களை நான் சாட்சியாக இருக்க கேட்டேன் என்று கூறமுடியுமா என்றால் முடியாது. அந்த காம்ப்ளக்சில் எத்தனை கடைகள் இருந்தது என்று கேட்டால் ஞாபகமில்லை.

முதல் தகவல் அறிக்கை, 161 வாக்குமூலங்கள் யார் தயார் செய்தார்கள் என்று கேட்டால் போலிஸ் டீம் தான் தயார் செய்தார்கள். ரைட்டர் தயார் செய்தார் நான் கையொப்பம் போட்டேன். எங்கு வைத்து தயார் செய்யப்பட்டது என்று கேட்டால் முகாமில். புகார், ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் தனிக்கை நமுனா ஆகியவற்றை எழுதியது ஒரே நபர் என்று சொன்னால் எனக்கு தெரியாது, ரைட்டர் கையெழுத்து போல் உள்ளது. புகாரை ரைட்டர் எழுதினாரா என்று கேட்டால் அவருடைய கையொப்பம் தான் உள்ளது அவர் தான் எழுதியிருப்பார். நான் எதிரியின் கடையில் எந்த பொருளும் கைப்பற்றவில்லையென்று சொன்னால் சரியல்ல. நான் சொன்ன தேதியில், நேரத்தில் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யவில்லையென்றாலும், எதிரியை கைது செய்யவில்லையென்றாலும், எதிரியை கைது செய்திருந்தால் அவரின் உறவினருக்கு தகவல் அளித்திருப்பேன் என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லையென்று சொன்னாலும், முகாமில் வைத்து புள்ளி விவர கணக்கிற்காக ஆவணங்களை தயார் செய்து பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை–** இல்லை.

Sd.xxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd.xxx V.Lavanya,
Judicial Magistrate No.I,
Chengalpattu.